Registered as a News Paper

பக்கங்கள்: 04

விலை ரூபா: 5-00

நல்லூர் இல நூலகம்
யாழ்ப்பாணம்

# ஈழநாதம்

THE EELANAATHAM

Peoples Daily

மக்கள் தினசரி

நாதம் 03 திருவள்ளுவர் ஆண்டு 2023 ஆவணி 24 (09 - 09 - 1992) புதன்கிழமை ஓசை 204

## ஹெரோயின் பாவனை இலங்கையில் அதிகரிப்பு

ஹெரோயின் போதைப் பொருள் உட்கொள்ளும் பழக்கம் இலங்கையில் பரவி வருவதாக ஆறு மாகாணங்களில் பல்வேறு குழுக்கள் நடத்திய மதிப்பீடு களிலிருந்து தெரிய வருகிறது. இலங்கையின் பல நகர்ப் புறங்களில் ஹெரோயின் போதைவஸ்தைப் பலர் விற்று வருகிறார்கள் என்று இலங்கைப் போதைப் பொருள் தடுப்புச் சங்கத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார். பாடசாலை மாணவர்கள் உட்பட இளைஞர்கள் மத்தியில் போதைப் பொருள் பாவிக்கும் பழக்கம் அதிகரித்து வருகிறது. ஏனைய மருந்து வில்லைகளான வலியம் லிப்பிறியம் ஆகியவற்றை நகர்ப்புறப் பெண்கள் அதிகம் (4ஆம் பக்கம் பார்க்க)

# சர்வமத நல்லெண்ண தூதுக்குழு

# அடுத்த மாதம் யாழ். வருகிறது

## தமிழ் மக்களின் நிலையை நேரில் கண்டறிவது நோக்கமாம்

(யாழ்ப்பாணம்)

சர்வமத நல்லெண்ணத் தூதுக்குழு ஒன்று அடுத்த மாதம் யாழ்ப்பாணம் வரவுள்ளதாகத் தெரியவருகின்றது தமிழ் மக்களின் இன்றைய நிலையை நேரடியாகக் கண்டறியும் நோக்கில் வரும் இத் தூதுக்குழுவினர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்து பேசவுள்ளதாகவும் தெரியவருகின்றது.

அடுத்த மாதம் வரும் இவ் நல்லெண்ணத் தூதுக்குழுவில் கத்தோலிக்க, கிறிஸ்தவ, பௌத்த இஸ்லாமிய மதப் பிரதிநிதிகள் இடம் பெறுவார்கள் எனத் தெரியவருகின்றது.

யாழ் வந்துசேர்ந்ததும் இத் தூதுக்குழுவினர் யாழ். குடாநாட்டின் இன்றைய நிலையை நேரில் கண்டறிவதோடு மக்களின் குறைகள் தொடர்பாகவும் கவனம் செலுத்துவதாகவும்தெரிவித்தனர்.

அத்தோடு, இவ்விஜயத்தின் போது நல்லெண்ணத் தூதுக் குழுவினர் விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகளையும் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரியவருகிறது.

## காரைநகர் இராணுவம் குடியிருப்புமீது ஷெல்வீச்சு

(யாழ்ப்பாணம்)

காரைநகரில் நிலைகொண்டிருக்கும் சிறிலங்கா இராணுவத்தினர் மூளாய், பொன்னாலை, சுழிபுரம் ஆகிய குடிமக்கள் வாழும் பகுதிகளை நோக்கி அகோர எறிகணைத் தாக்குதல் நடாத்தி உள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 6.30 மணியளவில் ஆரம்பமாகிய மேற்படி தாக்குதல் சுமார் இரண்டு மணித்தியாலங்கள் வரை நீடித்தது பல எறிகணைகள் பொதுமக்களின் குடியிருப்புப் பகுதிகளில் வீழ்ந்து வெடித்தது. இதனால் மேற்படி பகுதிகளைச் சேர்ந்த பொது மக்கள் பாதுகாப்பான இடங்களை நாடி ஓடினர். எறிகணைத் தாக்குதல் நடைபெற்ற அதே சமயம் கடற்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## யாழ். மறைமாவட்டத்திற்கு புதிய ஆயர் நியமனம்

யாழ் மறை மாவட்ட புதிய ஆயராக நியமிக்கப்பட்டுள்ள அதி. வண. தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை ஊர்காவற்றுறையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்.

12 - 07 - 1938 இல் பிறந்த இவர் தனதுஆரம்பக்கல்வியை ஊர்காவற்றுறை புனித அந்தோனியார் கல்லூரியிலும், இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் புனித பத்திரிசியார் கல்லூரியிலும் தொடர்ந்தார். யாழ்ப்பாணம் புனித மார்ட்டின் குரு மடத்திலும் 1957 - 1963 காலப் பகுதியில் கண்டி தேசிய குருமடத்திலும் பயின்றார்.

21-12-1963 இல் குருப்பட்டம் தரித்த வண. தோமஸ் சௌந்தரநாயகம், யாழ்ப்பாணம் ஆசனக்கோவில், நல்

(4 ஆம் பக்கம் பார்க்க)



அதி வண. தோமஸ் சௌந்தரநாயகம் அடிகளார்

## வடக்கு - கிழக்கு மாகாணசபை சிங்களவருக்கு சேவை புரியவில்லை

### திருக்கோணமலை எம். பி குணவர்த்தன

(திருக்கோணமலை)

வடக்கு - கிழக்கு மாகாண சபை சிங்களவர். முஸ்லிம்கள் வாழும் பகுதிகளுக்கு எந்த விதச் சேவையும் செய்வதில்லை என்று திருக்கோணமலை மாவட்டச் சுதந்திரக் கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர் எம். கே. ஏ. டி எஸ் குணவர்த்தனா திருக்கோணமலையில் நடைபெற்ற மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

தொடர்ந்துபேசிய குணவர்த்தனா மாகாண அமைச்சு அதிகாரிகள் திருகோணமலையை விட அதிக நேரத்தைக் கொழும்பில் கழிக்கிறார்கள். மாகாணசபை வாகனங்கள் சொந்தத் தேவைக்கே பாவிக்கப் படுகின்றன மாகாண சபையில் கடமையாற்றுபவர்களில் 99 சதவீதத்தினர் தமிழர்

[4 ஆம் பக்கம் பார்க்க]

## காணாமல்போனோர் தொகை மட்டக்களப்பிலேயே அதிகம்

1991 ஜனவரி 11 முதல் இவ்வருடம் ஜனவரி 10-ம் திகதி வரையான ஒரு வருட காலப்பகுதியில் மட்டக்களப்பு மாவட்டத்திலேயே மிக அதிகமானோர் காணாமற்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆட்களை தம்மிச்சை இன்றி அகற்றுகை பற்றி விசாரணை செய்ய என சிறிலங்கா ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ள ஆணைக் குழுவிற்கு கடந்த ஆண்டு 406 புகார்கள் கிடைத்தன எனவும் இதில் 58 புகார்கள் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து கிடைத்துள்ளது எனவும் தெரிவிக்கப்படுகிறது

இதற்கு அடுத்ததாக அம்பாறையில் 41 பேரும், கொழும்பில் 28 பேரும்

முஸ்லிம் காங். யோசனைகள்

## பௌத்தசங்க சபாவிடம் முன்வைக்கப்படுமாம்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணச் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்வைக்கும் யோசனைகளைப் பௌத்த சங்க சபாவிடம் முன் வைப்பேன் தேவையேற்படின் சங்க சபாவின் விருப்பத்திற்கு இணங்க மீண்டும் முஸ்லிம் காங்கிரஸ் தூதுக் குழுவோடு பேச்சுவார்த்தை நடத்துவேன் என மல்வத்தை பீடாதிபதி சங்கைக்குரிய ரம்புக்கே விபஸ்தி தேரர் தெரிவித்துள்ளார்.

இனப்பிரச்சினைத் தீர்விற்கு

## நியாயமான ஆலோசனை முஸ்லிம் காங். முன்வைக்கும்

[கண்டி]

இன்றைய இன நெருக்கடியில் ஏற்பட்டுள்ள வடக்குக் கிழக்குப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நீதியும், நியாயமும் உள்ள தீர்வு ஆலோசனைகளை சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவர் எம். எச். எம். அஷ்ரப் தெரிவித்தார்.

கண்டியில் நடைபெற்ற கட்சிக் கூட்டமொன்றில் பேசிய அவர் இதனைத் தெரிவித்தார். இதற்கான ஆரம்ப நடவடிக்கைகளில் இக்கட்சி இறங்

# நிவாரண வெட்டைக் கண்டித்து

காணாமல் போயுள்ளனர்.

[4 ஆம் பக்கம் பார்க்க]

பாராளுமன்ற தெரிவுக் குழு விற்கு சமர்ப்பிக்கும் என இக்

கியுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

# இன்று ஆர்ப்பாட்ட ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா இராணுவ நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான உலர் உணவு நிவாரணத்தை அரைவாசியாகக் குறைக்கப்பட்டதைக் கண்டித்து இன்று மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியும் மறியல் போராட்டமும் நடைபெற உள்ளது.

குடாநாடு தழுவிய வகையில் நடைபெற இருக்கும் இவ் வெகுஜனப் போராட்டத்தினை பல்வேறு வெகுஜன அமைப்புக்கள் ஏற்பாடு செய்துள்ளன. இன்றைய போராட்டத்தையொட்டி குடா நாட்டில் இயங்கும் அனைத்து அரச தனியார்துறை அலுவலகங்கள், தொழில் ஸ்தாபனங்கள் வர்த்தக ஸ்தாபனங்கள், அனைத்தும் மூடப்பட்டிருக்கும் எனினும் சிற்றுண்டிச் சாலைகளும், துவிச்சக்கர வண்டிக் கடைகளும் வழமை போல் இயங்கும்.

இன்று காலை யாழ். உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட மக்கள் அனைவரும் ஒன்று திரண்டு யாழ் செயலக வாசலில் நின்று மறியல் போராட்டம் செய்வர். தீவகத்தில் இருந்து இடம் பெயர்ந்த மக்கள் சத்திரச் சந்தியில் ஒன்று கூடி அங்கிருந்து ஊர்வலமாகச் சென்று நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலை அடைவர். வலிகாமப் பகுதிகளின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வரும் மக்கள் கொக்குவில் இந்துக் கல்லூரியில் ஒன்று கூடுவர்.

ஊர்வலமாகச் சென்று பின்னர் அங்கிருந்து நல்லூர் கந்தசுவாமி ஆலய முன்றலை

[4 ஆம் பக்கம் பார்க்க]

## எதிர்க்கட்சிகளை மிரட்ட ஜே.வி.பி. பற்றி புரளி

– மகிந்த ராஜபக்ச

அரசியலில் ஏற்பட்டுவரும் இடதுசாரி, வலதுசாரி அரசியல் கட்சிகளின் கூட்டை விரும்பாத ஐக்கிய தேசியக் கட்சி அரசு ஜே.வி.பி.யினர் மீண்டும் தலைதூக்குவதாக புரளியைக் கிளப்பிவிட்டுள்ளது என (அம்பாந்தோட்டை மாவட்ட) சிறிலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி மகிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கிராமங்கள் தோறும் அமைக்கப்பட்டு வரும் எதிர்க்கட்சிகளின் கட்சிக்கிளைகளை மிரட்டவும் இந்த ஜே.வி.பி குறித்த புரளி ஐக்கியதேசியக் கட்சிக்கு உதவுவதாக இருக்கும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## தமிழர் ஆசிரியர்சங்கம் கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

சிறிலங்கா அரசு வடக்கு கிழக்கிலுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கும் அகதிகளுக்கும் வழங்கும் நிவாரணத்தை வெட்டுவதைக் கண்டித்து இன்று அரச சார்பற்ற நிறுவனங்களினால் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள ஹர்த்தாலிலும் ஆர்ப்பாட்ட பேரணியிலும் கலந்து முழு ஆதரவையும் வழங்குமாறு சகல அதிபர்களையும் ஆசிரியர்களையும் இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம் கோருகின்றது.

# அமைச்சரவையில் மாற்றம் விரைவில் ஏற்படுத்தத் திட்டம்

தற்பொழுது பதவியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் அமைச்சரவையில் மிகவிரைவில் பெரும் மாற்றங்கள் கொண்டுவரப்பட இருக்கிறது. இதற்கான நடவடிக்கையில் இறங்குவதற்கு ஐக்கிய தேசியக்கட்சியின் உயர் பீடம் தீர்மானித்துள்ளது.

பிரதமமந்திரிப்பதவிஉட்பட பல முக்கிய அமைச்சர் பதவிகளில் மாற்றம் கொண்டுவரப்படுவதுடன் சில புதிய அமைச்சுக்கள் உருவாக்கப்பட இருப்பதுடன் பலருக்கு அமைச்சர் பதவிகளும், ராஜாங்க அமைச்சர் பதவிகளும் வழங்கப்பட இருக்கிறது. மேற்படி தகவல்களை ஐக்கிய தேசியக்கட்சியின் முக்கிய அதிகாரி ஒருவர் ''லங்காதீப'' என்ற சிங்கள வார இதழுக்குத் தெரிவித்திருக்கிறார்.

இக் கட்சி பதவிக்கு வந்த காலம் முதல் ஜனாதிபதி தேர்தல் வழக்கு முடிவு அறிவிக்கும் வரையான காலப்பகுதிவரையில் இக்கட்சி அங்கத்தவர்களின் நடவடிக்கைகளை மையமாகவைத்தே மேற்படி மாற்றங்கள் கொண்டுவரப்பட இருக்கிறது. கட்சியின ஒழுங்கு விதிகளைக் கடைப்பிடிக்கத் தவறிய பல உறுப்பினர்கள் கட்சியில் இருந்தும் பதவிகளில் இருந்தும் வெளியேற்றப்படலாம் என்றும் சிலர் பதவி உயர்வு பெறுவார்கள் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## சாய்ந்தமருது குண்டு வெடிப்பு

# விசாரணைக்குழு தமிழர்கள் எவரையும் விசாரணை செய்யவில்லை

(காரைதீவு)

சாய்ந்தமருது குண்டு வெடிப்பு சம்பவம் தொடர்பாக ஆராய நியமிக்கப்பட்ட விசாரணைக்குழு கல்முனை பிரதேசத்தில் தமிழர்கள் எவரையும் விசாரணை செய்யவில்லை என்றும், இது ஒருதலைப்பட்சமான நடவடிக்கை என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சாய்ந்தமருது சம்பவத்தின் பின்னர் காரைதீவு கிராமத்தைச் சேர்ந்த ஓய்வு பெற்ற அதிபர் ஒருவர் வெட்டுக்காயத்திற்கு இலக்காகி மரணமடைந்துள்ளார்.

மா.தம்பிராசா (வயது 58) என்பவர் காணாமல் போயுள்ளார்.

காரைதீவு அகதிமுகாமில் இருந்து தொழிலுக்கு புறப்பட்டுச் சென்ற 16பேர் இன்னமும் திரும்பவில்லை.

இந்நிலையிலும் விசாரணைக் குழுவானது தமிழர்களைச் சந்தித்து விசாரணை நடத்தவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## உணவுப் பொருள்களுடன் "குமண" நாளை வரலாம்

(யாழ்ப்பாணம்)

குடாநாட்டிற்குத் தேவையான ஒரு தொகுதி அத்தியாவசிய உணவுப் பொருள்களுடன் ''குமண'' என்ற கப்பல் நாளை பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது

1000 மெற்றிக்தொன் அரிசி, 1250 மெற்றிக் தொன் மா, 200 மெற்றிக் தொன் சீனி, 14 மெற்றிக் தொன் பால்மா, ஆகியவற்றுடன் வேறும் சில அத்தியாவசிய உணவுப்

(4ஆம் பக்கம் பார்க்க)

## குமணவில் தபால் பொதிகள்

பருத்தித்துறை துறைமுகத்திற்கு நாளை வந்துசேரும் என எதிர்பார்க்கப்படும் ''குமண'' என்ற கப்பலில் சுமார் 275 தபால் பொதிகளும் எடுத்துவரப்படுகிறது

[க]

## தென்னிலங்கையில் குற்றச் செயல்கள் அதிகரிப்பு சிறைச்சாலைகள் நிரம்பின

(கொழும்பு)

தென்னிலங்கைச் சிறைச்சாலைகள நிரம்பிவழிகின்றது. சிறைச்சாலைகளை தற்பொழுது நிரப்பிக்கொண்டிருப்பவர்களில் பெரும்பாலானவர்கள் சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்களாகவே காணப்படுகின்றனர்.

போதைவஸ்து, கொள்ளை, கொலை, கற்பழிப்பு, போன்ற பல்வேறு சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்ட சுமார் 12398 பேர் இவ்வாறு சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டிருக்கின்றனர். இந்த நிலை தொடருமேயானால் மேலும் பல புதியசிறைச்சாலைகளைத் திறக்க வேண்டியநிலை உருவாகும் என்று சிறைச்சாலை உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

காடென்ற இல்லம் நாடொன்றின் இல்லம்

இன்று முதல் ஆரம்பம்!

யாழ்ப்பாண நகரின் மத்தியில்

ஈழநாதம் இதழின் விளம்பரப் பணிமனை

உங்கள் அபிமானத்தைப்பெற்ற ஈழநாதம் மக்கள் தினசரியில் நீங்கள் விளம்பரங்கள் தருவதற்கு வசதியாக எங்கள் பணிமனை இன்று முதல் இயங்கும்

தொடர்புகளுக்கு:-

தமிழ்த் தாய் பதிப்பகம்
191, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## வரி விளம்பரம்


### எழுதுனர் பரீட்சை

எழுதுனர் போட்டிப் பரீட்சைத் தகுதித்தேர்வுக்கான பொது விவேகப்பயிற்சி வெளிவந்துள்ளது. க. குணராசா எம். ஏ. எல்லா பிரபல புத்தக சாலைகளிலும் கிடைக்கும்.
(3143)

### கடிகாரமா? றேடியோவா?

உங்கள் கடிகாரங்கள் றேடியோக்கள் பழுதடைந்து விட்டனவா? முழு உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ள இன்றே எம்மை நாடுங்கள் சகல கடிகார பற்றறிகளும் எம்மிடம் உண்டு. எமக்கு வேறு கிளைகள் கிடையாது. டில்கா வாச்வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி, (வானவில் கூல்பார் அருகாமையில்) யாழ்ப்பாணம்.
(சி/4964)

### தவறிவிட்டது

06-08-1992 இல் கோண்டாவில் சந்திக்கண்மையில் 702082617V இலக்கம் கொண்ட அடையாள அட்டையுடன் கூடிய பேஸ் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும்.
(3146)


## விமானத்தில் புகைபிடிக்க தடை

(கொழும்பு)

கொழும்புக்கும் திருச்சிக்கும் இடையில் எயர் லங்கா அறிமுகப்படுத்தியிருக்கும் விமானச் சேவையில் புகைபிடித்தல் தவிர்க்கப்பட்டுள்ளது. இவ் விமானச் சேவை இம் மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

இப்போது எயர் லங்கா வாரத்துக்கு மூன்று நாள்கள் திருச்சி கொழும்பு சேவையை நடத்துகிறது. செவ்வாய், வியாழன், சனிக்கிழமையில் நடைபெறும் இச் சேவையில் புகைப்பிடித்தல் முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது.

## மேரியம்மா விடுதலையாவார்

(கொழும்பு)

கூட்டுப்படை தலைமை அலுவலக குண்டு வெடிப்புச் சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்டு வழக்குத் தொடரப்படாமல் 13 மாதங்களுக்கு மேலாக தடுப்புக்காவ

## பிரேமதாசா பிரச்சினைக்கு ஒருபோதும் தீர்வு காணார்

**— சிறிமாவோ குற்றச்சாட்டு**

(கண்டி)

''ஜனாதிபதி வடக்குகிழக்கு பிரச்சினையைத் தீர்க்கமாட்டார். பிச்சைக்காரனுடைய புண்ணைப்போல இதை வைத்துக் கொள்ள வேண்டும் என்பதே அவருடைய ஆசை. எங்களுடைய தீர்வை முன் வைக்கும்படி இவர் கோருகிறார். மக்கள் எங்களை ஆட்சியில் அமர்த்தவில்லை. வடக்கு-கிழக்கு இணைப்பை நாங்கள் முற்றாக எதிர்க்கிறோம்.''

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவி சிறிமா பண்டாரநாயக்கா கண்டி போகம்பரை திடலில் இடம் பெற்ற பொதுக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ஜனாதிபதி தமது பதவியை ராஜினாமாச் செய்துவிட்டு மீண்டும் என்னோடு போட்டியிட முன்வருமாறு சவால் விடுகிறேன் என்றும், எந்தத் தேர்தல் வந்தாலும் நாங்கள் மக்கள்முன் செல்லத் தயாராக இருக்கிறோம் என்றும் அவர் தெரிவித்தார்.

## பண்டாரவளைச் சந்தையில் பத்துக் கடைகள் தீக்கிரை

(பண்டாரவளை)

பண்டாரவளை நகர சந்தைக்கு அருகில் உள்ள பத்துக் கடைகள் கடந்த வெள்ளியன்று தீக்கிரையாகின என்றும், இக்கடைகளில்வர்த்தகம் செய்தோரில் அநேகர் தமிழ் வர்த்தகர்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தீப்பிடித்ததற்கான காரணங்கள் என்ன என்பது உடனடியாகத் தெரிவிக்கப்படவில்லை. விஷமிகளின் வேலையா என்பது குறித்து பண்டாரவளை பொலிஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

இதேநேரம் தீயால் கடைகளை இழந்த வர்த்தகர்களுக்கு தற்காலிக கடைகளைக் கட்டிக் கொடுக்குமாறு இ. தொ. கா. உதவிச் செயலாளர் டி. வி. சென்னன் கேட்டுள்ளார்.

## பெண்களுக்கு தனிக்கணக்கு இலங்கை வங்கியில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

பெண்களுக்கென தனித்துவமான கணக்கினை ஆரம்பிக்கும் முதல் வங்கி இலங்கை வங்கியே என்றும் பெண்களே சேமிப்பதில் அக்கறையுடையவர்கள் ஆகையினால் போலும் வங்கி இதனை உணர்ந்து இவ்வரிய திட்டத்தை வகுத்துள்ளதென்றும் கூறி The Willis to Save is The Road is to Prosperity என்ற வாக்கியம் முன்னர் பிரதான இடங்களில் காணப்பட்டதாகவும் யாழ் மாவட்ட அரச அதிபர் திரு. கா. மாணிக்கவாசகர் இலங்கை வங்கியின் 53 ஆம் ஆண்டின் பூர்த்தியினை முன்னிட்டு சர்வதேச மகளிர் தினத்தை ஒட்டி மகளிர் பொற்கணக்கை அறிமுகஞ் செய்த அறிமுகவிழாவில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையில் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை மாலை 4.30 மணியளவில் நல்லூர் முருகன் ஆலைய முன்றலில் அமைக்கப்பெற்ற அவர்களது விசேஷ கரும பீடத்தில் விமரிசையாகக்கொண்டாடப்பட்ட இவ் விழாவிற்கு வங்கியின் பிரதான முகாமையாளர் திருமதி க துரைராஜா அவர்கள் தலைமைதாங்கி வரவேற்புரை நிகழ்த்துகையில் இலங்கை வங்கியினால் செயற்படுத்தப்படும் சேவைகளை எடுத்துக் கூறினார். பின்னர் விருந்தினர்களை வரவேற்றார். தொடர்ந்து நல்லை ஆதீன ஸ்ரீலஸ்ரீ குருமகா சன்நிதானம்ஞானசம்பந்தபரமாச்சாரியசுவாமிகள் ஆசியுரையை நிகழ்த்தினார். தொடர்ந்து பலநிகழ்வுகள் நடைபெற்றது.
(பா)

## சிறுதானியம் கொள்வனவு: அரச அதிபர் நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் குடாநாட்டில் விவசாயிகளிடம் இருந்து சிறுதானியங்களை கொள்வனவு செய்யவும் அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் தானியங்களை பலநோக்கு ...துள்ளார்.

குரக்கன், பயறு, கௌபி போன்ற சிறுதானிய வகைகளே கொள்வனவு செய்யப் பட உள்ளன.

விவசாயிகளிடம் இருந்து


## 6-ம் மாத நினைவஞ்சலி

வீரப் பிறப்பு

07 - 3 - 1976

❋

வீரச் சாவு

17 - 03 - 1992



### வீரவேங்கை ஞானி

( இராசரத்தினம் வைகுந்தன் )

பதினாறு வயதில் பாரைக் காக்க
பாயும் புலியாக பாய்ந்தெழுந்த - உன்னை
மணலாற்று மண் மாவீரனாக்கி
மாதங்கள் ஆறு போனதுவே
மறஞானி உன்னுடன் சேர்ந்து
மாவீரனாகிய மைந்தர்களுக்கும்
வீர அஞ்சலி செலுத்துகின்றோம்.

அல்வாய் கிழக்கு,
தெருமூடி மடத்தடி.

— குடும்பத்தினர்.
( சி/ 5016 )

## 1-ம் ஆண்டு நினைவஞ்சலி





### 2-ம் லெப். நேசன்

(சிவனேசன் சிவசங்கர்)

### வீரவேங்கை திலீர்

(பார்க்கண்டு இளங்கிரன்)

மரணத்தை வெல்வதற்காய்
மரணித்த வேங்கை நீங்கள்
மரணத்தை குறைப்பதற்காய்
மருத்துவம் பயின்றே நீங்கள்
போர்க்களத்தினில் பலிகள்குறைத்தீர்
பல களம் சென்று நீங்கள்
மணலாற்றில் மடிந்த போதும்
வரலாற்றில் நிலையாய் நிற்பீர்
ஓராண்டு கடந்தால் என்ன
வையகம் உள்ள மட்டும்


## நினைவு கூருகின்றோம்...

## 1992 - 09 - 09

1984ஆம் ஆண்டு இதே தினத்தில் காரைநகர், பொன்னாலைப் பகுதியில் இனங்காணப்படாத நிலையில் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த

★ ஜெகன் (மாணிக்கவாசகர் ஜெகதீஸ்வரன் சங்கரத்தை, வட்டுக்கோட்டை - யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - கரவெட்டிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ்ப் பொதுமகன்

1985 ஆம் ஆண்டு மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் பகுதியில் சிறிலங்கா சிறப்பு அதிரடிப்படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

ஜோன் (ராஜு ஜோன் கெனடி - இருதயபுரம் மட்டக்களப்பு)

பேணாட் (குருசுமுத்து துரைசிங்கம் - நாகர்கோவில், பருத்தித்துறை)

மட்டக்களப்பு, புகையிரத நிலைய வீதியில் சிறிலங்கா அதிரடிப் படையினர் மேற்கொண்ட திடீர்ச் சோதனையின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவெய்திய -

பிரதீஷ் (சின்னத்துரை ரகு - கோஸ்வே வீதி, ஆரையம்பதி - 03 - மட்டக்களப்பு)

பிரியன் (தம்பிப்பிள்ளை நவரட்ணராஜா - ஊர் வீதி, ஆரையம்பதி - 03 - மட்டக்களப்பு)

1987 ஆம் ஆண்டு அம்பாறை - தாண்டியடிப் பகுதியில் எதிர்பாராத விதமாக ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் எமைப் பிரிந்த -

கிருபா (பொன்னையா சிறிதரன் - அக்கரைப்பற்று 08 அம்பாறை)

1989 ஆம் ஆண்டு வவுனியா - அனந்தர் புளியங்குளம் பகுதியில் இந்தியப் படையினர் பதுங்கியிருந்து மேற்கொண்ட தாக்குதலில் வீரச்சாவெய்திய -

மணியம் (சின்னையா தேவதாசன் - புதுக்குளம், ஓமந்தை வவுனியா)

சுதன் (வேலாயுதம் சுரேந்திரன் சேமமடு, ஓமந்தை வவுனியா)

இதே சம்பவத்தின் போது இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்ச் சிறுவன்

1990 ஆம் ஆண்டு முல்லைத்தீவில் சிறிலங்காப் படையினரிற்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது எதிர்பாராத விதமாகப் பொறி வெடி வெடித்ததில் சயனைட் உட்கொண்டு எமைப் பிரிந்த -

ஜெயபால் (முத்துலிங்கம் சுகு - ஐயங்கேணி, ஏறாவூர் மட்டக்களப்பு)

மட்டக்களப்பில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட ஏறாவூர், தளவாயைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் - புல்லுமலைப் பகுதியில் சிறிலங்காப் படையினரால் கைதுசெய்யப்பட்டுச் சுட்டுக்கொல்லப்பட்ட 3 தமிழர்கள், - முறக்கொட்டாஞ் சேனைப் பகுதியிற் கைது செய்யப்பட்டுப் படுகொலை செய்யப்பட்ட வாழைச்சேனை, புதுக்குடியிருப்பைச் சேர்ந்த தமிழ்ப் பொதுமகன் - பிள்ளையாரடி, கொக்குவில், சத்துருக் கொண்டான் பகுதிகளில் சிறிலங்காப் படையினர் மற்றும் முஸ்லிம் ஊர்காவற் படையினரால் சுட்டும், வெட்டியும் படுகொலை செய்யப்பட்ட குழந்தைகள், பெண்கள் உட்பட 170 தமிழர்கள்.

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

செய்யப்பட்டு வழக்குத் தொடரப்படாமல் 13 மாதங்களுக்கு மேலாக தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருக்கும் போல் ஜேக்கப் மேரியம்மா விடுதலை செய்யப்படுவார்.

இத்தகவலை அரச சட்டத்தரணி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தெரிவித்தார்.

## மோதிலால் நேரு மாலை சூட்டினார்

(கொழும்பு)

அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர் மோதிலால் நேரு கடந்த செவ்வாய்க்கிழமை கொழும்பு சுசரித்தையில் ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவைச் சந்தித்து அவருக்கு மாலை சூட்டினார்.

ஜனாதிபதி தேர்தல் ஆட்சேபனை வழக்குத் தீர்ப்பு வெளியானதையடுத்தே மோதிலால் நேரு அவருக்கு மாலை போட்டார். ஜனாதிபதிக்கு வாழ்த்துத் தெரிவிப்பதற்காக சுசரித்தவில் சுமார் இரண்டாயிரம் பேர் கூடியிருந்தனர்.

---

## விரிவுரைகள் ஆரம்பமாகின்றன

1992 செப்டம்பர் பரீட்சைக்குத் தோற்றும் யாழ் பல்கலைக்கழக வெளிவாரி வர்த்தக மாணவர்களுக்கான விசேட விரிவுரைகள் 10-09-1992—13-09-1992 வரை காலை 8.00 மணி தொடக்கம் மாலை 3.00 மணி வரை பல்துறையைச் சேர்ந்த விரிவுரையாளர்களினால் தொடர்ந்து விரிவுரைகள் வழங்கப்படும்.

பட்டப்படிப்புகள் கல்லூரி
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

பரீட்சைக்குத் தோற்றும் அனைத்து மாணவர்களும் பங்குபற்றலாம்.

கல்வியாண்டு 92/93 பதிவு செய்த மாணவர்களுக்கான விரிவுரைகள் ஆரம்பமாகி நடைபெறுகின்றன.

(சி/5023)

---

வனவு செய்யவும் அவ்வாறு கொள்வனவு செய்யப்படும் தானியங்களை பலநோக்கு கூட்டுறவு சங்கங்கள் மூலம் பொதுமக்களுக்கு விநியோகிக்கவும் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் நடவடிக்கை எடுத்தபட உள்ளன.

விவசாயிகளிடம் இருந்து கிலோ குரக்கன் ரூபா 26க்கும், பயறு ரூபா 25 க்கும், கௌபி ரூபா 20க்கும் கொள்வனவு செய்யப்பட உள்ளன. (42)

## நுண்ணறிவுப் போட்டிகள் முதலிடம் பெற்றோர் விபரம்

(பருத்தித்துறை)

இந்தியஇராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட சமூக சேவையாளரும்ஆசிரியருமான புலோலியூர் அம்பலவாணர் ஞாபகார்த்தமாக புலோலியில் பாடசாலை மாணவர்களுக்கிடையேயான நுண்ணறிவுப் போட்டி ஒன்று நடாத்தப்பட்டது

இந் நுண்ணறிவுப் போட்டியில் முதலாம் இடங்களைப் பெற்ற மாணவர்கள் விபரம் வருமாறு.

ஆண்டு 13(இருவர்) த. தயாபரன் (ஹாட்லிக் கல்லூரி) தி. விஜயரேகா(பரு. மெத பெ. உ கல்லூரி), ஆண்டு11 இ. வரதராஜா (ஹாட்லிக் கல்லூரி), ஆண்டு 10 ஜெ வாசுகி (பரு. மெத. பெ. உ. கல்லூரி), ஆண்டு 09 ச துளசிமதி (பரு மெத பெ. உ. கல்லூரி) ஆண்டு 08 சு. கண்ணன் (ஹாட்லிக் கல்லூரி), ஆண்டு 07 செ. பஞ்சகல்யாணி (பரு.மெத.பெ.உ. கல்லூரி), ஆண்டு 06 ஸ்ரீ அகிலன் (ஹாட்லிக் கல்லூரி), ஆண்டு 05 ச. ரமணன் (புற்றளை மகாவித்தியாலயம்)

இப் போட்டிகளுக்கான பரிசில்கள் புலோலி கல்வி நிலைய கலைமகள் விழாவிலே பிரதம விருந்தினரால் வழங்கப்படுமென அறிவிக்கப்பட்டுள்ளது. (25)

## கச்சாய்க்கு மாற்றப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

உடுவில் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் தங்கியிருந்தவர்களில் சுமார் 75 அகதி குடும்பங்கள் நேற்று சாவகச்சேரிக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் கச்சாய் பகுதியில் அவர்கள் குடியமர்த்தப் படுவர் எனத் தெரிவிக்கப்பட்டது. (42)

---


## வெற்றிடங்கள்

★ பொறியியல் படவரைஞர்,
★ ஒப்புநோக்குநர்,
★ மொழிபெயர்ப்பாளர்,
★ இலக்கிய எழுத்தாளர்,
★ தமிழ் வல்ல தமிழாசிரியர்,
★ கலைப்பட்டதாரிகள்,
★ பத்திரிகையாளர்கள்,

கல்வித் தகைமை, அனுபவம், சான்றிதழ்களுடன் செப்டம்பர் 20 ஆம் தேதிக்கு முன்னர் விண்ணப்பிக்கவும்.

விளம்பர இல 168, மே/பா ஈழநாதம்,
31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம்.

(3145)


---

வரலாற்றில் நிலையாய் நிற்பா
ஓராண்டு கடந்தால் என்ன
வையகம் உள்ள மட்டும்
உம் பெயர் வாழ்ந்திருக்கும்
வீழ்ந்த உம் பணிகள் தொடர
விரைந்துமே நாங்கள் உள்ளோம்
விடியலின் சாயல் இங்கே
தெரியத்தான் தொடங்கியாச்சே.

- சகபோராளிகள்

(3095)

---

## 2-ம் ஆண்டு நினைவலைகள்

தாயின் மடியில் : 17-11-1974



தமிழீழ மண்ணில் : 02 09-1990

### வீரவேங்கை சின்ன அக்காச்சி
(பஞ்சலிங்கம் தயானந்தன்)

திதி: 09-09-92

ஓ தயானந்தனே!
பல்லாயிரம் முறை
உன் நாமத்தைக் கூறுகின்றோம்
உறுதியடைகின்றது எம் நெஞ்சங்கள்

உன்னை இழந்தும் ..
இன்றும் உன் நினைவோடு
நாம் இன்னும்
வாழ்கின்றோம் தம்பி!

மலருகின்ற தமிழீழத்தில்
மாவீரனாகிய நீயும்
காற்றினில் உலாவருவாய்
என்பதற்காய் காத்திருக்கின்றோம் தம்பி.

உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

தயானந்தன் வீதி,
நீர்வேலி தெற்கு.

குடும்பத்தினர், நண்பர்கள்,
உற்றார், உறவினர்கள்.

(சி/5008)

---

1991 ஆம் ஆண்டு மணலாற்றில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரில் வீரச்சாவெய்திய -

2-ம் லெப். காயத்திரி [இந்திராதேவி இரத்தினம் - 7-ம் குறிச்சி, அக்கரைப்பற்று, அம்பாறை]

சாந்தினி [ஜெயசோதி நாகலிங்கம் - தம்பிலுவில், அம்பாறை]

லெப். அரசன் [செல்லத்தம்பி பரமேஸ்வரன் - கிண்ணையடி, வாழைச்சேனை, மட்டக்களப்பு]

2-ம் லெப். மலைமகள் [வளர்மதி பிள்ளையான் - பாடசாலை வீதி, கிரான், மட்டக்களப்பு]

செல்வரூபி [காளியம்மா பொன்னையா - பன்குடாவெளி, மட்டக்களப்பு]

கப்டன் கலையரசன் / மிதுலன் [குமாரசிங்கம் குணரஞ்சன் - செக்கட்டிப்புலவு, வவுனியா]

ஜொய்சி [வாசுகி காளிமுத்து - 7-ம் வாய்க்கால், கிளிநொச்சி]

மேஜர் தண்டேஷ் [கனகநாயகம் குணேந்திர மோகன் - பழைய உடையார் ஒழுங்கை, ஓடக்கரை, பருத்தித்துறை]

2-ம் லெப். சேரன் [இராசரத்தினம் ஜெயராஜ் - கும்பிழாவளை, அளவெட்டி - யாழ்ப்பாணம்]

2-ம் லெப். நேசன் [சிவநேசன் சிவசங்கர் - மானிப்பாய் மேற்கு - யாழ்ப்பாணம்]

பிரவீனா [யசோதாதேவி செல்வநாயகம் - முகமாலை, எழுதுமட்டுவாள்]

திலீப் [மார்க்கண்டு இளங்கீதன் - சிவன்கோவில்வீதி, ஆவரங்கால், புத்தூர்]

வவுனியாவில் சிறிலங்கா இராணுவத்தினர் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதலின்போது ஏற்பட்ட சமரில் வீரச்சாவெய்திய -

லெப். அருட்செல்வன் / பூட்டோ [கறுப்பையா சிவலோகநாதன் - கற்குளம், வவுனியா]

லெப். வேங்கை / ராம்ராஜ் (மயில்வாகனம் தமிழ்ச்செல்வன் - பாவற்குளம், வவுனியா)

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்

★ இக்குறிப்பிடப்பட்டுள்ள மாவீரர் எமது அமைப்பைச் சாராமல் இம்மண்ணின் மீட்பிற்காய்ப் போராடியவராவார்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்**

(சி/5022)

### சிந்தனைக்கு

சமாதான காலத்திலும் போர்க்காலத்திலும்
அரசாங்கத்தின் குறிக்கோள் ஆள்வோரின்
அல்லது வர்க்க இனத்தினரின் பெருமையல்ல,
பாமர மக்களின் இன்பவாழ்வே

— பெவெரிட்ஜ் பிரபு

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம் 09- 09- 1992
தொலைபேசி
ஆசிரியபீடம் 025 - 2889 நிர்வாகபீடம் 2308
த.பெ. எண் - 05

## அரசின் கடமை

வடக்கு கிழக்கில் இடம்பெயர்ந்த மக்களுக்கு வழங்கப்படும் நிவாரண வெட்டைக் கண்டித்து இன்று பூரண ஹர்த்தால் அனுஷ்டிக்கப்படவுள்ளதோடு, பிரம்மாண்டமான ஆர்ப்பாட்டப் பேரணியையும் நடத்த தமிழீழ வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் முடிவெடுத்துள்ளது.

வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் எடுத்த இம்முடிவானது, சிறிலங்கா அரசாங்கத்திற்கு உரிய கடப்பாட்டை உணர்த்தும் அதேவேளை தமிழ் மக்களின் நிலைப்பாட்டை வெளிக்காட்டும் ஒன்றாகவும் அமையக் கூடும்.

நிவாரணம் வழங்கத் தேவைப்படும் 260 கோடி ரூபாவில் - 100 கோடி ரூபா வழங்கப்பட்டு விட்டது. மிகுதியை சிறிலங்கா அரசாங்கம் ஒதுக்கீடு செய்தல் என்பது அவ்வளவு கடினமானகாரியமல்ல இது குறித்து சில தினங்களுக்கு முன் இப்பகுதியிலேயே குறிப்பிட்டிருந்தோம். அதாவது நிதி நெருக்கடி என்ற போர்வையில் பிரச்சினையைத் தட்டிக்கழிக்க சிங்கள அரசு எண்ணுகின்றது என்பதே உண்மை.

ஆனால் தமிழ் மக்கள் எவரும் பிச்சை என்ற ரீதியில் சிங்கள அரசிடம் நிவாரண உதவி வழங்குமாறு கோரவில்லை. சிங்கள அரசாங்கம் இரண்டு விதத்தில் தமிழ் மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டிய கடப்பாட்டில் உள்ளது.

ஒன்று, தானுண்டு, தன் தொழில் உண்டு என தமது வீடுகளில் நிம்மதியாக வசித்து வந்த அப்பாவித் தமிழ்மக்களை அவர்கள் வீட்டை விட்டுச் சிங்கள இராணுவம் துரத்தியது. அத்தோடு, பெறுமதி மிக்க சொத்துக்களையும், உடைமைகளையும் அபகரித்துள்ளதோடு அவர்களின் நிலத்தையும் ஆக்கிரமித்துள்ளது. இந்நிலையில் தொழில் வாய்ப்பை இழந்து, தங்குவதற்கு இடமும், உண்ணுவதற்கு உணவும் இன்றி அலையும் மக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டியது கட்டாயமாகும். அதாவது மக்கள் அகதிகளாக அலையவேண்டி வந்தமைக்கு சிங்கள ஆட்சியாளர்

# பிரபாகரனை நேசிக்கும் தொண்டமான் ஒரு பச்சை இனவாதி

## ஹெலஉறுமய பாய்ச்சல்

அமைச்சர் தொண்டமான் ஒரு பச்சை இனவாதி என்று சுதந்திரக் கட்சிக்குள் இயங்கும் ஹெல உறுமய குழுவின் இணைச் செயலாளரான திலக் கருணாரத்னா குற்றம் சாட்டியுள்ளார்.

அண்மையில் கொட்டகலயில் சிறீபாதகல்லூரியைஆரம்பித்து வைத்த போது இடம் பெற்றவைபவத்தில் சிறிலங்கா ஜனாதிபதி பிரேமதாசா அமைச்சர் தொண்டமான் ஒரு இனவாதியும் அல்ல இந்திய சார்புப் போக்கு உடையவரும் அல்ல என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் அது உண்மையல்ல. உண்மையில் அமைச்சர் தொண்டமான் ஒரு பச்சை இனவாதியே என்று திலக் கருணாரத்னா மேலும் குறிப்பிட்டுள்ளார். இது பற்றி ஐலண்ட் நாளிதழுக்கு அவர்எழுதியுள்ள கடிதம் ஒன்றில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது.

வடக்கு, கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்பட வேண்டும் என்று தொண்டமான் தொடர்ந்து கூறியிருந்தார். ஆனால் இதன் மூலம் கிழக்குப் பகுதியில் வாழும் சிங்கள முஸ்லிம் மக்களின் அரசியல் அதிகாரங்கள் கேள்விக்கு உள்ளாக்கப்படுகின்றது.

மேலும் வடக்கு, கிழக்கு மாகாணத்தில் மாகாண சபையின் மேற்பார்வையின் கீழ் முஸ்லிம்களுக்கென தனியான சபை அமைக்கப்படல் வேண்டும் என்று தொண்டமான் கூறியுள்ளார். இத்தகையதொரு சபை சிங்களவர்களுக்காகவும் அமைக்கப்பட வேண்டும் என்றுஅவர்கோரவில்லை.

இது வடக்கு, கிழக்குப் பகுதியில் தமிழர்களை முதல்தரப் பிரஜைகளாக்கும் அதே வேளை முஸ்லிம்களை இரண்டாம் தரத்திற்கும் சிங்களவர்களை மூன்றாம் இடத்திற்கும் தள்ளும் தொண்டமானின் பாரியதிட்டத்தின் அடிப்படையாகும்.

மேலும் மலையகத்தில் நிலமற்ற இந்தியத் தமிழர்களுக்கே நிலம் ஒதுக்க வேண்டும் என்று வலியுறுத்தும் தொண்டமான் சிங்களவர்களுக்கு அப்பகுதியில் நிலம் ஒதுக்கப்படுவதைக் கண்டிப்பதோடு வடக்கு, கிழக்குப் பகுதியில் சிங்களவர்களுக்கு நிலம் ஒதுக்குவதற்கு மறுப்பும் தெரிவிக்கின்றார். ஆனால் நிலப் பற்றாக்குறையால் சிங்களவர்களே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர் என்பதும் பகிர்ந்தளிக்கப்படக் கூடிய நிலத்தின் பெரும் பகுதி வடக்கு, கிழக்குப் பகுதியிலேயே இருக்கின்றது என்பதும் அனைவரும் அறிந்ததே.

கொத்மலை நீர்த் தேக்கத் திட்டத்தால் பாதிக்கப்பட்டு, இடம்பெயர்ந்த சிங்களவர்களுக்கு புசல்லாவையில் நிலம் ஒதுக்கப்படுவதற்கு அவர் எதிர்ப்புத் தெரிவித்தார். இந்தியத் தமிழர்களுக்கு புசல்லாவையிலோ அல்லது நாட்டின் ஏனைய பகுதியிலோ நிலம் ஒதுக்கப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படவில்லை என்பதைத் திரு தொண்டமானே நன்கறிவார்.

அத்துடன் ஒரு தொழிற் சங்கவாதி என்ற முறையிலோ, பெருந்தோட்டதுறையில் பெரிய தொழிற் சங்கமொன்றின் தலைவர் என்ற வகையிலோ, அல்லது குறிப்பிடக்கூடிய அளவுக்கு சிங்களத் தொழிலாளர்களும் அங்கம் வகிக்கும் தொழிற்சங்கம் ஒன்றின் தலைவர் என்ற முறையிலோ தோட்டங்களில் குடியிருக்காத தொழிலாளர்களின் நலன்கள் பற்றி தொண்டமான் அக்கறை செலுத்தவில்லை. தோட்டங்களில் குடியிருக்கும் தொழிலாளர்களில் பெரும்பான்மையானோர் இந்தியத் தமிழர் என்பதும், தோட்டங்களில் குடியிருக்காத தொழிலாளர்களில் பெரும்பான்மையானோர் கிராமப் புறச் சிங்களவர் என்பதும், குடியிருக்கும் தொழிலாளருக்கும் - குடியிருக்காத தொழிலாளருக்கும் இடையில் தோட்டங்களில் பாகுபாடு நிலவுகின்றது என்பதும் இங்கு குறிப்பிடக் கூடியதே.

இந்த உண்மைகளின் அடிப்படையிலும், இன்னும் குறிப்பிடக்கூடிய பல்வேறு காரணிகளின் மூலமும் தொண்டமான் இனவாதி அல்ல என்றால் வேறு யார்தான் இனவாதியாக இருக்கமுடியும்? என்றும் கேள்வி எழுப்பியுள்ளார்.

அத்தோடு தொண்டமான் நீண்டகாலமாகவே பரந்த தமிழ்த்தேசியத்தை வலியுறுத்தி வருபவராவார் என்றும், இது ராஜீவ் காந்தி கொலைக்குப் பின்னர் மேலும் அம்பலத்துக்கு வந்தது என்றும் அவர் தறிப்பிட்டுள்ளார்.

அதாவது நீதிமன்றம் ஒன்றின் மூலம் குற்றவாளியாகக் காணப்படும் வரையில் பிரபாகரனையோ-விடுதலைப் புலிகளையோ இவ்விடயத்தில்குற்றம் சாட்டமுடியாது என்று தொண்டமான் பகிரங்கமாக அறிவித்தார். அத்துடன்இனப் பிரச்சினைக்கான தீர்வில் பிரபாகரனையோ, விடுதலைப் புலிகளையோ இலங்கை அரசு புறக்கணிக்க முடியாது என்றும் குறிப்பிட்டார்.

ஆனால் தொண்டமானையும், பிரேமதாசாவையும்தவிர ஏனைய அரசாங்கக்கட்சியினர் யாவரும் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்பட முன்பு விடுதலைப்புலிகள் அழிக்கப்பட வேண்டும் என்றே கூறிவருகின்றனர் ஆயுதப் படையினரும் இதற்காகவே போரை நடத்திவருகின்றனர். இந்தியாவும் பிரபாகரனுக்கு எதிராக குற்றப்பத்திரத்தை தாக்கல் செய்துள்ளது.

எப்படியாயினும் தொண்டமான் தொடர்ந்தும் பிரபாகரனின் தலைமைத்துவத்திற்கு அங்கீகாரம் அளித்து வருகிறார். தமது குடும்பத்தவர் சகலரையும் இந்தியாவில் குடியமர்த்தியுள்ள தொண்டமான் தொடர்ந்தும் சிறிலங்காவின் அமைச்சராக நீடிக்க முடிகின்றது. அவர் வருடாந்தம் ஏழு அல்லது எட்டுத்தடவை இந்தியாவிற்கு சென்று வரவும் முடிகின்றது இவை அவரின் இந்திய ஆதரவுப்போக்கைப் புலப்படுத்தவில்லையா? அவர் பரந்த தமிழ்த்தேசியவாதம்பற்றி மட்டும்தான் பேசுகிறார்என்று கூறிவிட முடியுமா?

தொண்டமான் எப்போதும் பெரியவாக்கு வங்கி ஒன்றை கட்டுப்படுத்தக் கூடியவராக உள்ளார் என்பதும், நாட்டையார்ஆளவேண்டும் என்பதைத் தீர்மானிக்கக் கூடியவராகஉள்ளார் என்பதும் உண்மைதான். ஆனால் அதற்காக ஒரு பக்கத்தை மட்டும் பார்ப்பவராக நாம் இருக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளார்.

# பொஸ்னியாவில் இத்தாலிய விமானம் சுட்டுவீழ்த்தப்பட்டதாக அறிவிப்பு

பொஸ்னியாவில் நொறுங்கி விழுந்த இத்தாலிய நிவாரண விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டிருப்பதாக இத்தாலிய வெளிநாட்டமைச்சர் எமிலியோ கொலொம்போ அறிவித்துள்ளார்.

பொதுக் கூட்டமொன்றில் பேசிய அவர் எங்கள் விமானம் நிச்சயமாகச் சுட்டுவீழ்த்தப்பட்டுள்ளது. பலாத்காரத்தை முடிவுக்குக் கொண்டுவர இணக்கம் தெரிவித்துள்ள சக்திகளே அதைச் சுட்டு வீழ்த்தியுள்ளன. ஆனால் மோதலில் ஈடுபட்டுள்ள எந்தப் பிரிவினர் விமானத்தைச் சுட்டு வீழ்த்தினர் என்பது தெளிவில்லாமல் உள்ளது என்றும் அவர் தெரிவித்தார்

விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டதற்கு ஆதாரபூர்வமான சாட்சியங்கள் இருப்பதாக இத்தாலிய பாதுகாப்பு அமைச்சர் சல்வோ அன்டோவும் கூறியுள்ளார்.

ஆனால் விமானம் நொறுங்கியதற்கான உண்மையான காரணத்தை உறுதிப்படுத்த இன்னும் சில காலம் பிடிக்கும் என ஐ. நா. வினதும் இத்தாலியினதும் விசாரணையாளர்கள் கூறியுள்ளனர்

இத்தாலிய வெளிநாட்டமைச்சர் பிரித்தானிய பிரதமர் ஜோன் மேயருக்கும், ஐ. நா. பொதுக்காரியதரிசி பூட்டர் ஸ்காலிக்கும் எழுதியுள்ள கடிதத்தில் குற்றவாளிகளைத் தண்டிக்க போட்டிக் குழுக்கள் மீது சர்வதேச நிர்ப்பந்தத்தை ஏற்படுத்த வேண்டுமெனவலியுறுத்திஇருக்கிறார்.

விமானம் நொருங்கியதை அடுத்து வாரக்கடைசியில் விநியோகிக்கப்படும் முக்கிய நிவாரணப் பொருள்கள் சரஜிவோவுக்கு கொண்டுசெல்லப்படாமல் உள்ளது இதனால் 3,80,000 மக்கள் பாதிப்படைந்துள்ளனர்.

# 'குரு' ராஜாவின் மனைவி நீதிமன்றத்தில் கொலை

(கொழும்பு)

'குடுராஜா' என்றழைக்கப்படும் போதைப் பொருள் வியாபாரியான சிதம்பரம் தர்மராஜாவின் மரணம் தொடர்பாக அவரின் மனைவி சந்திரிகா நேற்று முன்தினம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்ட சமயம் அங்கு வைத்துக் கத்தியால் குத்திக்கொலை செய்யப்பட்டார்.

கடந்த ஆகஸ்ட் மாதம் பிற்பகுதியில் சிதம்பரம் தர்மராஜா கொம்பனித்தெருவில் அவரது இல்லத்தில் மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டார். இப்படுகொலையைச் செய்ததான சந்தேகத்தின் பேரில் 'குடுராஜா'வின் மனைவி சந்திரிகா (வயது 29) மற்றும் அவரது கள்ளக் காதலர்களும் நேற்று முன்தினம் கொழும்புநீதிமன்றத்தில்ஆஜர் செய்யப்பட்டனர். நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டபோது பார்வையாளர் பகுதியிலிருந்துஒரு கும்பல்திடீரென்று எழுந்து சந்திரிக்காவை கத்தியால் குத்தி கொலை செய்துவிட்டு தப்பிச்சென்றுள்ளது

# தென் ஆபிரிக்க காங்கிரஸ் பேரணியில்

# நியமனமில்லா நிலையில் 41 பற்சிகிச்சை நிபுணர்கள்

யும் ஆக்கிரமித்துள்ளது. இந்நிலையில் தொழில் வாய்ப்பை இழந்து, தங்குவதற்கு இடமும், உண்ணுவதற்கு உணவும் இன்றி அலையும் மக்களுக்கு அரசாங்கம் நிவாரணம் வழங்க வேண்டியது கட்டாயமாகும். அதாவது மக்கள் அகதிகளாக அலையவேண்டி வந்தமைக்கு சிங்கள ஆட்சியாளர்களே காரணம் ஆகும்.

இரண்டாவதாக இன்னும் தமிழ் மக்களைச் சிறிலங்கா அரசாங்கம் "தன்னாட்டுப்" பிரஜைகள் என்றே உரிமை கோரி வருகிறது. அவ்வாறானால் நெருக்கடிக்கு உள்ளாகியுள்ள 'தமது நாட்டு' மக்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டியது அரசின் பொறுப்பாகும்.

இந்நிலையில், தமிழ் மக்கள் அரசாங்கத்திடம் கோருவது பிச்சையல்ல தமது உரிமையையே கோரி நிற்கின்றனர். இரண்டு வருடங்களுக்கு மேலாகப் போரிலும் பொருளாதாரத் தடையிலும் பாதிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களுக்கு சிங்கள அரசு நிவாரணம் கொடுக்கவில்லை தமிழ் மக்களும் நிவாரணம் கொடுக்குமாறு சிங்கள அரசாங்கத்தைக் கோரவில்லை, ஆனால் இராணுவத்தால் ஆக்கிரமிக்கப்பட்ட பகுதியில்இருந்து விரட்டியடிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணம் வழங்குமாறே கோரிக்கை விடப்படுகின்றது. அதாவது அரசின் இராணுவ நடவடிக்கையால் நேரடியாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடி உதவி வழங்கிப் பராமரிக்குமாறு கோரப்படுகிறது.

அதாவது தற்பொழுது அரசாங்கத்திடம் மக்கள் கோரும் நிவாரணம் சொற்பமானது. தற்பொழுது மிக அத்தியாவசிய தேவையாகவுள்ள நிவாரணத்தையே மக்கள் கோருகின்றனர். ஆனால் இம்மக்களுக்கு அரசாங்கம் வழங்கவேண்டிய நிவாரண உதவிகளோ இதைப் போன்று பலமடங்காகும். அதாவது தமிழ்மக்கள் மீது ஒரு யுத்தத்தை நடத்தி உடல் ரீதியாகவும், உளரீதியாகவும் பாதிப்பை ஏற்படுத்திய அரசாங்கம் அதற்கான நிவாரணம் வழங்கவேண்டும். இந்நிவாரணங்கள் தனியாக, இடம்பெயர்ந்த மக்களுக்கு மட்டுமல்ல போரினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் வழங்கப்பட வேண்டும்.

அதாவது, சிங்கள அரசாங்கம் தமிழ்மக்களை தமது மக்கள் எனக்கூறிக் கொள்ளும்வரை அவர்களுக்குரிய உடனடி நிவாரணங்களை வழங்க வேண்டியது அதன் கட்டாயமான கடமையாகின்றது. அதேவேளை, ஒரு தேசிய இனத்தைத் திட்டமிட்டு அழித்துவரும் அரசாங்கம் அதற்குரிய நட்டஈட்டையும் என்றாவது செலுத்தியே ஆகவேண்டும். இவற்றைக்கோருவதற்கு பாதிக்கப்பட்ட மக்களுக்கு எப்பொழுதும் உரிமையும் உண்டு.

சகதிகள் அதைச் சுட்டு வீழ்த்தியுள்ளன. ஆனால் மோதலில் ஈடுபட்டுள்ள எந்தப் பிரிவினர் விமானத்தைச் சுட்டு

என ஐ. நா. வினதும் இத்தாலியினதும் விசாரணையாளர்கள் கூறியுள்ளனர்.

இத்தாலிய வெளிநாட்

வோவுக்கு கொண்டுசெல்லப் படாமல் உள்ளது இதனால் 3,80,000 மக்கள் பாதிப் படைந்துள்ளனர்.

### தென் ஆபிரிக்க காங்கிரஸ் பேரணியில்

# அரச படைகள் துப்பாக்கிப் பிரயோகம் 28 பேர் பலி 188 பேர் காயம்

(ஜொகனஸ்பேர்க்)

தென் ஆபிரிக்காவில் சொஸ்கியில் தென்ஆபிரிக்க காங்கிரஸ் பேரணி ஒன்றின் மீதுஅரச படைகள் நடத்திய துப்பாக்கிப் பிரயோகத்தில் 28பேர் கொல்லப்பட்டனர் என்றும், 188பேர்காயமடைந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சொஸ்கிப் பகுதியில் டிகிளார்க் ஆதரவான இராணுவத்தலைவர் பிரிகேடியர் டுபாகஸவை பதவி நீக்கம் செய்யுமாறு கோரி ஒரு லட்சம் ஏ. என் சி. ஆதரவாளர்கள் பேரணி நடத்தினர் என்றும் அப்போதே அரசபடைகள்துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும் அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேலும் எந்தவித முன்னெச்சரிக்கையோ, உத்தரவோ எதுவும் இன்றி அரசபடைகள் திடீரென தாக்கின என்றும் அங்கு நின்ற வெளிநாட்டு நிருபர்கள் தெரிவித்தனர்.

இதனைத் தொடர்ந்து அப்பகுதிகளில் கலவரம் மூண்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## யுத்த விமான விற்பனை பெருமளவு மந்தம்

பிரிட்டனின் பாண்டுரோவில் நடக்கும் விமானக் கண்காட்சியில் விமான விற்பனை மிகவும் மந்தமடைந்துள்ளதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பனிப்போர் முடிவடைந்தபின் விமானங்களைக் கொள்வனவு செய்வதில் நாடுகள் அவ்வளவு ஆர்வமாக இல்லை எனத் தெரிவிக்கப்படுகிறது

மேற்சொல்லப்பட்ட கண்காட்சியில் 30க்கு மேற்பட்ட நாடுகளைச்சேர்ந்த 600 விமானக் கம்பனிகள் போட்டியிட்டாலும் விற்பனை வாய்ப்புகள் பெரிதாக இல்லை. 20 மில்லியன் ஸ்ரேலிங் பவுண் செலவில் சில ஐரோப்பிய நாடுகள் கூட்டுச் சேர்ந்து தயாரித்த நவீன போர்விமானம் எல்லா நாடுகளையும் கவரும் என எதிர்பார்க்கப்பட்டது

ஆனால் ஜேர்மனி இக்கூட்டுத் தயாரிப்பில் இருந்து பின்வாங்கி விட்டதால் பிரிட்டன், இத்தாலி, ஸ்பெயினின் கூட்டு முயற்சி அவ்வளவாக வெற்றியளிக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அமெரிக்காவின் எவ்-18 சுவீடனின் வேறு போர் விமானங்கள் இதற்குப் போட்டியாக வந்துள்ளன.

முன்னாள் சோவியத் யூனியனைச் சேர்ந்த குடியரசுகளின் கூட்டமைப்பு விமானக் கண்காட்சியில் பெரியளவில் பங்கேற்கிறது.

## விமானவிற்பனையைநிறுத்த புஷ் நிர்வாகம் முடிவு

எவ் - 15 ரக விமானங்களை சவுதி அரேபியாவுக்கு விற்பனைசெய்வதில்லைஎன அமெரிக்க புஷ் நிர்வாகம் முடிவு செய்துள்ளதாக பிரபல விண்வெளி சம்பந்தமான சஞ்சிகையொன்று தகவல் வெளியிட்டுள்ளது.

செப்டம்பர் மாதம் 7 ஆம் திகதி வெளியான சஞ்சிகையிலேயே சவுதி அரேபியாவுக்கு ஜெட் விமானங்களை விற்பனை செய்வதில்லை யென முடிவு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

எனினும் இதை வெள்ளை மாளிகை மறுத்துள்ளது. முன்னர் சவுதிக்கு 72 விமானங்கள் விற்பனையாக முடிவானது குறிப்பிடத்தக்கது.

## கிணற்றில் வீழ்ந்து 30பேர்மரணம்

ஆந்திரப் பிரதேசத்தில் அரசுப் போக்குவரத்து பஸ் ஒன்று கிணற்றில் விழுந்ததில் அதில் பயணம் செய்த 30 பேர் மூழ்கி இறந்தனர் இவர்களில் 22 பேரின் சடலங்கள் மீட்கப்பட்டன.

கருண்நகர் மாவட்டத்தில் ராமப்பூர் கிராமத்திற்கு அருகே வயல் வெளியில் இருந்த கிணற்றில் இந்த பஸ் உருண்டு விழுந்ததாக செய்திகள் கூறுகின்றன. இதில் 60 பயணிகள் இருந்தனர்.

## பெனாசிர் எச்சரிக்கை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தானில் தேசிய அரசு ஒன்று அமைக்கப்படாவிட்டால் இஸ்லாமாபாத்தில் மறியல் ஒன்றை மேற்கொள்ளப் போவதாக பாகிஸ்தானின் முன்னாள் பிரதமரும், எதிர்க்கட்சித் தலைவியுமான பெனாசிர் பூட்டோ எச்சரித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய பெனாசிர் இதனைத் தெரிவித்தார்.

## நியமனமில்லா நிலையில் 41 பற்சிகிச்சை நிபுணர்கள்

(கொழும்பு)

பல்கலைக்கழகங்களில் இருந்து இந்த வருட இறுதியில் சித்தி பெற்று வெளியேறிய 41 பற்சிகிச்சை நிபுணர்கள் இன்னமும் நியமனம் பெறாமல் உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

பற்சிகிச்சை நிபுணர்களுக்கென 17 வெற்றிடங்களே உள்ளன என்றும், இத்தொகையை அதிகரிப்பதற்கு திறைசேரி அங்கீகாரமளித்தால் அனைவருக்கும் நியமனம் வழங்கலாமென சுகாதார சேவைகள் நாயகம் டாக்டர் ஜோர்ஜ் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

தொகையை அதிகரிக்குமாறு அமைச்சு சென்ற வருடமே கேட்டிருந்தது என்றும், திறைசேரி இன்னமும் அங்கீகரிக்கவில்லை என்றும்,

பதினேழு வெற்றிடங்களை நிரப்புவதற்கும் கஷ்டங்கள் ஏற்பட்டுள்ளதாகவும். அரசாங்க சேவைக் கமிஷன் இன்னமும் இதுபற்றி பரிசீலனை செய்து வருகின்றது என்றும் அவர் தெரிவித்தார்.

## நரிமலைப் பகுதி புகையின் வெப்பநிலை வீழ்ச்சி

(பண்டாரவளை)

தியத்தலாவ இராணுவ பயிற்சி முகாமிற்கு அருகேயுள்ள நரிமலைப் பிரதேசத்தில் கடந்த சில தினங்களாக வெளிவந்த புகையின் வெப்ப நிலையில் வீழ்ச்சி காணப்படுவதாக இராணுவப் பயிற்சி முகாமின் உயர் இராணுவ அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நிலமட்டத்திலிருந்து சுமார் பத்து அடிக்கு கீழே வெப்பமாகி இருக்கிறது என்றும்,

பூகற்பவியல் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் தலைமையிலான குழு நேற்று முன்தினம் ஆராய்ச்சி வேலையை ஆரம்பித்துள்ளது என்றும்,

இந்தப் பகுதிகளுக்கு செல்ல பொதுமக்களுக்கு அனுமதியில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

## வடபகுதிப் பெண் ஒருவர் கோட்டையில் கைது

(கொழும்பு)

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் வடபகுதியைச் சேர்ந்த பட்டதாரிப் பெண் ஒருவரை கோட்டைப் பொலிசார் கைதுசெய்துள்ளனர் என்று கொழும்புப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ். மணிக்கூட்டு வீதியைச் சேர்ந்த இவர் கையில் தங்க வளையல்கள் அணிந்திருந்தார் என்றும், இவர் சந்தேகத்துக்கிடமான முறையில் நடமாடியதால் கைது செய்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

மட்டக்குளியிலுள்ள தமது வீட்டில் தனியாக வசித்து வருவதால் பாதுகாப்புக்காக தினமும் இரவில் கோட்டை ரயில் நிலையத்தில் வந்து தங்கியிருப்பதாக விசாரணைகளின் போது அப்பெண் தெரிவித்ததாகவும்,

மனநோய் வைத்தியரிடம் காண்பிப்பதற்காக கோட்டை ரயில் நிலையத்தில் இவர் தற்போது தடுத்து வைக்கப்பட்டுள்ளார் என்றும் கூறப்பட்டுள்ளது.

ஈழநாதம்

## பௌர்ணமி தீப அரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் தீப அரங்கில் பௌர்ணமி இசைநிகழ்ச்சி எதிர்வரும் 11-ம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 6-30 மணிக்கு இடம் பெறவுள்ளது.

இந் நிகழ்ச்சியில்வேணுகான மணி திரு. ஏ நமசிவாயம், திரு. ரி. தர்மசீலன் ஆகியோர் இணைந்து வழங்கும வேணுகான இசை (புல்லாங்குழல் இசை) இடம் பெறவுள்ளது. இந் நிகழ்ச்சியின் அமைப்பாளர் வயலின் வித்துவான் ஆர் எஸ். கேசவமூர்த்தி ஆவார்.

# இந்திய ஒலிபரப்பு அமைச்சு "றோ"வின் கட்டுப்பாட்டில்

(டில்லி)

இந்திய தகவல் ஒலிபரப்பு அமைச்சு 'றோ'வின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப் பட்டுள்ளது என்று அரசாங்கத்தின் வெளிவிவகார வேவு பார்க்கும் அறிக்கைகள் கூறுகின்றன இத் தகவலை பிரபல இந்தியப் பத்திரிகையான 'இன்டிபென்டன்ற்' வெளியிட்டுள்ளது.

ஆலோசனைக் கமிட்டிக் கூட்டமொன்றில் இந்திய பாராளுமன்ற எதிர்க்கட்சி உறுப்பினர்கள் இத் தகவலை தெரிவித்தார்கள் என்றும், 'றோ' தூரதர்சனையும், அகில இந்திய வானொலிச் செய்திகளையும் தனது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருக்கிறது என்று இந்த எம்.பிக்கள தெரிவித்தனர் என்றும் அப்பத்திரிகை மேலும் தெரிவித்துள்ளது.

## இந்தியாவின் எச்சரிக்கையையும் மீறி

# 50 மிராஜ் யுத்த விமானங்கள் பாகிஸ்தானுக்கு அவுஸ். விற்பனை

(இஸ்லாமாபாத்)

பாகிஸ்தான் தனது விமானப் படையில் ஐம்பது மிராஜ் போர் விமானங்களை சேர்த்துள்ளதாக பாகிஸ்தானிய பாதுகாப்பு உற்பத்தி அமைச்சர் அறிவித்துள்ளார்.

இஸ்லாமாபாத்தில் செய்தியாளர்கள் மத்தியில் பேசிய அவர் அவுஸ்திரேலியாவிடம் இருந்து இந்த போர் விமானங்களை கொள்வனவு செய்ததாகவும், ஏற்கனவே பணம் செலுத்தப்பட்டுள்ள விமான அணியை ஒப்படைக்க அமெரிக்கா மறுத்திருக்கிறது என்றும் தெரிவித்தார்.

பாகிஸ்தானுக்கு விமானங்கள் வழங்குவது தொடர்பாக இந்தியா தனது எச்சரிக்கையை ஏற்கனவே அவுஸ்திரேலியாவிற்கு விடுத்திருந்தது தெரிந்ததே.

## ஐக்கியநாடுகள் சபை ஜனநாயக ரீதியில் செயற்பட அணிசாரா நாடுகள் முயற்சி

(ஜகார்த்தா)

ஐ.நா.சபையை ஜனநாயக ரீதியில் செயல்படுமாறு, செய்வதற்கான திட்டங்களை தயாரிப்பதற்காக உயர்மட்ட அணிசாரா நாடுகள் பணிக்குழு ஒன்று ஜகார்த்தா உச்சிமாநாட்டில் அமைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தோனேசியாவின் தலைநகர் ஜகார்த்தாவில் நடைபெற்ற அணிசாரா நாடுகள் உச்சிமாநாட்டில் 10வது கூட்ட நிறைவு நிகழ்ச்சிகளுக்குப்பின்னர் வெளியிடப்பட்ட ஜகார்த்தா செய்தியில் இது பற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐ நா.சபையை சீரமைத்து புத்துயிர் ஊட்டி ஜனநாயக ரீதியில் செயற்பட வைக்கவும், பாதுகாப்புச் சபையின் உறுப்பினர் பதவி, மற்றும் ஐ நா. பொதுச்சபை, பாதுகாப்புச் சபை ஐ நா. தலைமைச் செயலாளர் ஆகியவற்றுக்கிடையே சமச்சீரான உறவுநிலை இருக்கவும் உச்சிமாநாட்டின் இறுதிப் பிரகடனத்தில் தெரிவிக்கப் பட்டது.

## அமெரிக்க தேர்தல் கருத்துக் கணிப்பு

# ஐந்து பிரதான நகரங்களில் பில்கிளின்றன் முன்னணியில்

(வாஷிங்டன்)

அமெரிக்க அதிபர் தேர்தல் பற்றி கடந்த சனியன்று வெளியான கருத்துக் கணிப்புகளின்படி ஐந்து பிரதான நகரங்களில் தற்போதைய அதிபர் ஜோர்ஜ் புஷ்ஷை விடவும், ஜனநாயகக் கட்சி வேட்பாளரான பில்கிளின்றன் முன்னிலையில் இருப்பதாகத் தெரிய வந்துள்ளது.

கடந்த ஆறு பொதுத் தேர்தல்களின் போது ஐந்து தேர்தல்களில் குடியரசுக் கட்சியே வெள்ளைமாளிகையி அதிகாரத்தைநகரப்பகுதியின்வாக்காளர்களின் ஆதரவோடு வென்று வந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# ராஜீவ் காந்தி கொலைக்கு புதிய காரணம் தெரிவிப்பு

(டில்லி)

காங்கிரஸ் கட்சிக்கு எதிரான சில பிரமுகர்களோடு விடுதலைப் புலிகள் ஏற்படுத்திக் கொண்ட ரகசிய உடன்பாடு தான் ராஜீவ்காந்தி கொலைக்கு காரணம் என்று அகில இந்திய காங்கிரஸ் குழுவின் பொதுச் செயலாளர் ராஜேந்திர குமாரி ஜெயின் கமிஷன் முன் தாக்கல் செய்துள்ள வாக்கு மூலத்தில் தெரிவித்துள்ளார்

13 பக்கங்கள் கொண்ட இந்த வாக்கு மூலம் டில்லியில் தாக்கல் செய்யப்பட்டது.

ராஜீவ் கொலை சதித்திட்டத்தின் ஒவ்வொரு கட்டத்திலும் புலிகளுக்கும் புலிகளின் நடவடிக்கைகளுக்கும் தமிழகத்தின் தி மு க. மற்றும் சில குறிப்பிட்ட அரசியல் கட்சிகளில் உள்ளவர்களும் உதவியும் ஆதரவும் அளித்தார்கள் எனவும் அந்த வாக்குமூலத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## 130 அகதிகள் நாடுதிரும்பினர்

தமிழ் நாட்டில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் 130 பேர் நேற்று சென்னையிலிருந்து விமானமூலம் திருக்கோணமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டனர்.

நேற்று முன்தினமும் 132 அகதிகள் திருக்கோணமலைக்கு அனுப்பிவைக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே.

## ஜே.வி.பி. உறுப்பினர் பொலிசில் சேர்ந்தார்?

(காலி)

ரிஷேர்வ் பொலிஸ் படைப் பிரிவைச் சேர்ந்த ஒருவரை ஆகஸ்ட் 30 ஆம் திகதி மொறவாக்கல பொலிஸார் கைது செய்துள்ளனர்.

ரிஷேர்வ் பொலிஸ் படைப் பிரிவில் சேர்வதற்கு முன்னர் இவர் மொறவாக்கல டெல்வா கிராமத்தில் ஜனதா விமுக்தி பெரமுனையில (ஜே வி பி) ஒரு முக்கியஸ்தராக இருந்தார் என்று பொலிஸ் தரப்பில் சொல்லப்படுகிறது

## யூகோஸ்லாவியாவில் ஐ.நா.வின் ராணுவ தலையீடு; டக்ளஸ் ஹேர்ட் எச்சரிக்கை

(லண்டன்)

யூகோஸ்லாவியாவில் ஐக்கிய நாடுகள் சபையின் இராணுவத் தலையீடு குறித்து பிரிட்டனின் வெளியுறவுச் செயலாளர் டக்ளஸ் ஹேர்ட் கடும் எச்சரிக்கையினை வெளியிட்டார்,

அவர் மேலும் கூறுகையில் ஐக்கிய நாடுகள் சபையின் பாதுகாப்புச் சபை நிரந்தரத் தீர்வு காண்பதிலேயே அக்கறை செலுத்த வேண்டுமெனவும் இராணுவ ரீதியாக இதுசாதிக்கப்படுவது சாத்தியமல்ல என்பதோடு பெரும் பொருட் செலவையும் ஏற்படுத்தும் என்றும் குறிப்பிட்டார்.

எனினும் பிரிட்டனும், ஏனைய நாடுகளும் ஐக்கிய நாடுகள் பாதுகாப்புப படைக்குத் தமது துருப்புக்களையும் அனுப்புவதற்கேற்ற வகையில் மாற்றங்களைச் செய்து வருகின்றன.

இந்த நிலையில் ஏதாவது செய்யப்பட்டாக வேண்டுமென்பதால் ஐ நா. இரண்டு முனைகளிலும் சிக்கல்பட வேண்டியிருப்பதாக அவர் மேலும குறிப்பிட்டார்.

## கல்வி வளர்ச்சிக்கழகம் ஆரம்பம்

கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 3.30 மணிக்கு மாணவர்களின் நலன்கருதி ஆண்டு 6—ஆண்டு 11வரை இலவச வகுப்புக்கள் நடைபெறவுள்ளன. இதில் இணைந்து கல்வி கற்க விரும்பும் மாணவர்கள் இங்கு சமூகந்தந்து தங்கள் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கேட்டுக்கொள்கிறது.

## செல்வச்சந்நிதி தேர்

(கொழும்புத்துறை)

தொண்டமனாறு அருள்மிகு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத தேர்த்திருவிழா நாளை காலை நடைபெறும். பூரணைதினமான11ஆம் திகதி வெள்ளிச்கிழமை காலை தீர்த்தத்திருவிழா இடம்பெறும்.

அன்னதானக் கந்தன் மடத்தில் தொடர்ச்சியாகத் திருவிழாக்காலங்களில் அடியார்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. [24]

# ஜனாதிபதி ஆட்சி முறையினால் இலங். எதிர்காலம் ஆபத்திலுள்ளது

## -பேராசிரியர் வர்ணபால

(கண்டி)

ஜனாதிபதி மீது தாக்கல் செய்யப்பட்ட குற்றப் பத்திரிகை புத்தி ஜீவிகள் மற்றும் பத்திரிகையாளர் மீது அண்மைக் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட தாக்குதல்கள் போன்ற தொடர்ச்சியான சம்பவங்களுக்கு 1978ஆம் ஆண்டு அரசியல் அமைப்புச் சட்ட முரண்பாடுகளே காரணமாகும். அரசியல் அமைப்புச் சட்டத்துக்கு அமைய ஏற்படுத்தப்பட்ட நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சி முறையினால் நாட்டின் எதிர்காலமே ஆபத்தில் உள்ளது இவ்வாறு பேராதனைப் பல்கலைக் கழகத்தின் அரசியல் விஞ்ஞானத் துறைத் தலைவர் பேராசிரியர் வர்ணபாலா தெரிவித்தார்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சி உள்ளூர் ஆட்சி மன்றங்களின் உறுப்பினர்களுக்கென வத்தேகம நகர மண்டபத்தில் இடம் பெற்ற கருத்தரங்கு ஒன்றில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் சிறிலங்காவில் ஓர் அசாதாரண சூழ் நிலையில் ஜனநாயக ஆட்சி இடம்பெற்று இராணுவ ஆட்சி இடம் பெறும் அறிகுறிகள் தெளிவாகத் தென்படுகின்றன. சிவில் நிர்வாகம் செயலற்று விட்டது. உள்ளூரிலும், சர்வதேச மட்டத்திலும் அரசு எதிர்ப்புக்களுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது. வடக்கிலும், கிழக்கிலும் நடைபெறும் யுத்தத்தினால் 27 000 இளைஞர் கை, கால் போன்ற உறுப்புக்களை இழந்துள்ளனர். 66 000 ஆண்களும், பெண்களும் காணாமற் போயுள்ளனர். ஆயிரக்கணக்கான படித்த வாலிபர்களுக்குத் தொழில் வாய்ப்பு இல்லை.

இந்த அரசை இல்லாமல் செய்து அரசியல் அமைப்புச் சட்டத்தில் திருத்தங்கள் செய்து ஜனநாயகத்தை மீளவும் நிலைநாட்டுவதுதான் இந்தத் துர்ப்பாக்கிய நிலைக்கான தீர்வாகும் என்று தெரிவித்தார்.

# வீதியில் படுத்திருந்தவர் லொறி ஏறி பலியானார்

(குருநகர்)

கிளாலிச்சந்தி பிள்ளையார் ஆலய வீதியில் படுத்திருந்தவர் மீது லொறி ஏறியதில் உடல் நசிந்து பலியானார்.

இச்சம்பவம் நேற்று முன் தினம் திங்கள் இரவு நடைபெற்றது.

பலியானவர் குருநகர் தண்ணீர்த் தாங்கி வீதியைச் சேர்ந்த சிங்கம் செபஸ்தியாம் பிள்ளை (வயது 44) என்று தெரிவிக்கப்படுகிறது

பலியானவர் கிளாலிப் பாதையில் கூலித் தொழில் ... போது அவர் மீது லொறி ஏறி மரணிக்க நேர்ந்ததென்றும் மேலும் தெரிவிக்கப்பட்டது. (21)

யாழ். ... லூர், பெரியவிளான், நானாட்டான், வங்காலை ஆகிய இடங்களில் குருவாகப் பணி செய்தார்.

ரோமாபுரியில் ஏர்பன் பல்கலைக்கழகத்தில் விவிலிய இறையியலில் கலாநிதிப் பட்

# தியாகி திலீபன் நினைவு பொது அறிவுப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட மக்கள் நலன் புரிக் கழகத்தால் தியாகி திலீபனின் நினைவாக வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் பொது அறிவுப் போட்டி இம் ... பட உள்ளது.

மேற்படி போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள்பாடசாலைஅதிபர்ஊடாக மக்கள் நலன்புரிக் கழகத்திடம்

## விமானப்பயணிகள் 10 பேர் காயம்

# தமிழ் மொழி அமுலில் இல்லை

(கொழும்பு)

தமிழ் இப்பொழுது இந்நாட்டின் அரச கரும மொழிகளில் ஒன்று. ஆனால் அதிகாரிகள் தமிழ் மொழியைசரியான முறையில் அமுலாக்குவதில்லை இதனால் சிறுபான்மையினர் அதிருப்தியடைந்துள்ளார்கள் என்று அரசகரும மொழிகள் ஆணைக் குழுவின் தலைவர் டெஸ்மொன்ட பெர்னாண்டோ அதிருப்தி தெரிவித்துள்ளார்.

சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கருமமா

யாழ். மாவட்ட மக்கள் நலன் புரிக் கழகத்தால் தியாகி திலீபனின் நினைவாக வருடா வருடம் நடாத்தப்பட்டு வரும் பொது அறிவுப் போட்டி இம்முறை யாழ் மாவட்ட பாடசாலைகளில் மேற்பிரிவு மாணவர்களிற்கிடையே நடாத்தப்

மேற்படி போட்டியில் கலந்து கொள்ள விரும்பும் மாணவர்கள்பாடசாலைஅதிபர்ஊடாக மக்கள் நலன்புரிக் கழகத்திடம் விண்ணப்பிக்கவும் என மேற்படி கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. (பா)

# மரண அறிவித்தல்



செல்வி

## யூடித் நிர்மலி சவரிமுத்து

சுதுமலை மானிப்பாய் வடக்கைச் சேர்ந்த செல்வி யூடித் நிர்மலி சவரிமுத்து 08 - 09 - 1992 நேற்று அகால மரணமானார். அன்னார் திரு/திருமதி சவரிமுத்து தம்பதிகளின் அன்பு மகளும், ஜோசப் (ஜேர்மனி), ராணி பற்றீசியா (பாரேன்), ஜேப்ஸ் (பிரான்ஸ்), றொபேட்(சவுதி) ஆகியோரின் அன்பு சகோதரியும், ஜொய்சி றொபேட், உதயா, உமா, புனிதா, பாஸ்கரன் ஆகியோரின் அன்பு மைத்துனியும், யக்குலினின் அன்பு மாமியும் ஆவார். அன்னாரின் பூதவுடல் (09 - 09 - 92) இன்று காலை 10 மணியளவில் 41, இராசாவின்தோட்டம் வீதியில் உள்ள இல்லத்திலிருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:

[சி-5025] ஈ. ஆர். ஆசீர்வாதம்

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி, 31 ஆம் இலக்கத்திலுள்ள 'ஈழநாதம்' பணிமனையில் 1992 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 9 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

தக்கது. [24]

## விமானப்பயணிகள் 10 பேர் காயம்

(சென்னை)

சிங்கப்பூரிலிருந்து சென்னைக்கு வந்த ஏயர் இந்தியா விமானம் ஒன்று மோசமான காற்று மண்டலத்தைக் கடந்தபோது, அதில் பயணம் செய்த 193 பயணிகளில் பத்துப் பேருக்குக் காயம் ஏற்பட்டது.

வேறு எவ்விதசேதமும் இன்றி விமானம் நேற்றுச் சென்னை மீனம்பாக்கம் விமான நிலையத்தில் தரையிறங்கியது.

கூறினார்.

அவர் தொடர்ந்து பேசுகையில் சிறிலங்காவில் ஓர் அசாதாரண சூழ் நிலையில் ஜனநாயகம் செயற்படுகிறது கூட்டம் கூடும் உரிமை,பேச்சு மற்றும் கருத்து வெளியிடும் சுதந்திரம் போன்ற பலவகையான சுதந்திரங்கள் இருப்பதாகச் சொல்லப் படுகிறது ஆனால் இவற்றிற்கு எதிரானதும், பயங்கரமானதுமான சம்பவங்கள் நடைபெறுகின்றன.

பல ஜனநாயக விரோத நடவடிக்கைகள் நாட்டில் நடைபெறுகின்றன.சர்வதேச மனித உரிமைகள் எண்ணக்கரு மீறப்

# ஆவணங்களை புனரமைக்க மக்கள்வங்கி நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

கடந்த காலங்களில் தீவுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கை காரணமாக ஊர்காவற்றுறை மக்கள் வங்கி கிளையிலிருந்த ஆவணங்கள் பத்திரங்கள் ஆகியவை பாதிப்படைந்துள்ளமையால் இவற்றைப் புனரமைப்பு செய்வதற்கு யாழ் மக்கள் வங்கிக்கிளை நடவடிக்கை எடுத்துள்ளது.

இவற்றைப் புனரமைப்புச் செய்வதற்கு உதவியாக இவ் வங்கியில் அடகு வைத்துமீளப் பெறாதுள்ள வாடிக்கையாளர்கள் தம்மிடம் உள்ள அடகுச் சீட்டுக்களுடன் யாழ். ஸ்ரான்லி வீதியில் உள்ள மக்கள் வங்கிக் கட்டடத்தில் தற்காலிகமாக இயங்கும் இக்கிளை முகாமையாளரைச் சந்திக்குமாறு கேட்டுக் கொள்ளப் படுகின்றனர். (பா)

## ஹெரோயின்

பயனபடுத்தி வருகிறார்கள் என்றும், அவர்கள் இதற்கும் பழக்கப்பட்டு விடுகிறார்கள் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்புநகரில்ஆண்களும், பெண்களுமாக துர்நடத்தையில் ஈடுபட்டு வரும் சுமார் 30,000 பேரில் பெரும்பாலானோர் போதைப் பொருளுக்கு அடிமையாக உள்ளார்கள். இந்தப்பழக்கம்வீதிகளில்அலையும் சுமார் 10,000 பேர்கள் மத்தியிலும் பரவியிருப்பதாகப் போதைப் பொருள் தரப்புச் சங்கம் தெரிவிததுள்ளது.

## ஹெலி நோட்டம்

(பண்டத்தரிப்பு)

வலிகாமம் மேற்கு, தென் மேற்குப் பகுதிகளில் நேற்றுக் காலை சிறிலங்கா உலங்கு வானூர்தி ஒன்று பல தடவைகள் பறந்து நோட்டமிட்டுச் சென்றது.

இளவாலை, பண்டத்தரிப்பு, சித்தன்கேணி, வட்டுக் கோட்டை, அராலித்துறை, மூளாய் மற்றும் கரையோரப் பகுதிகளையே உலங்கு வானூர்தி உயரப்பறந்து நோட்டமிட்டது. (ச)

## உணவுப்

பொருள்களையும் ஏற்றிக் கொண்டு நேற்றுக் காலை கொழும்புத்துறைமுகத்தில் இருந்து மேற்படி கப்பல் புறப்பட்டு விட்டதாக கொழும்பில் இருந்து நேற்று நண்பகல் எமக்குக் கிடைத்த செய்திகள் தெரிவிக்கின்றன. (க)

பிள்ளை (வயது 44) என்று தெரிவிக்கப் படுகிறது

பலியானவர் கிளாலிப் பாதையில் கூலித் தொழில் செய்பவரென்றும் வேலை முடிந்து ஆலய வீதியில் அயர்ந்து நித்திரையில் இருந்த

## காரைநகர்

பிராந்தியத்தில் தரித்து நிற்கும் பீரங்கிப் படகில் இருந்து மேற்படி பகுதிகளை நோககிப் பீரங்கித் தாக்குதலும் நடாத்தப்பட்டது. (க)

## காணாமல்

இவ்வருடத்தின் முதல் ஆறு மாத காலப்பகுதியில் காணாமல் போனதாக தெரிவிக்கப் பட்டுள்ள 47 பேரிலும் கூட மட்டக்களப்பு மாவட்டத்திலேயே அதிகளவானோர் (31 பேர்) காணாமல் போயுள்ளனர்.

## நிவாரண

அடைவர். வடமராட்சியைச் சேர்ந்த மக்கள் கோப்பாய், நீர்வேலி ஊடாக பருத்தித்துறை வீதி வழியாக வந்து நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தை அடைவர். தென்மராட்சி மக்கள் செம்மணி ஊடாக தபால் கட்டைச் சந்திக்கு வந்து அங்கிருந்து நல்லூர் கந்த சுவாமி ஆலய முன்றலை அடைவர்.

அனைத்துப் பகுதிகளில் இருந்தும் அணிவகுத்து வந்த மக்கள் நல்லூர் கந்தசுவாமி ஆலயத்தில் ஒன்று சேர்ந்ததும் பிரதான பேரணி ஆரம்பமாகும் இப்பேரணி கோவில் வீதி வழியாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தை அடையும். அங்கு கண்டன மகஜர் ஒன்று கையளிக்கப்படும் அதன் பின்னர் யாழ் அரச செயலகத்தை அடைந்து செயலக அதிகாரிகளிடம் ஜனாதிபதிக்கான கண்டன மகஜர் கையளிக்கப்படும். மேற்படி ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொள்ளுமாறு பல்வேறு வெகுஜன அமைப்புக்கள் பொது மக்களுக்கு அழைப்பு விடுத்துள்ளன. (க)

செய்தார்.

ரோமாபுரியில் ஏர்பன் பல்கலைக்கழகத்தில் விவிலிய இறையியலில் கலாநிதிப் பட்டத்தினைப் பெற்றார்.

அதி.வண. தோமஸ்சௌந்தரநாயகம் ஆண்டகை மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக 24-01-81 இல் நியமிக்கப்பட்டார்

அதி. வண தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்களின் தந்தை பெயர்எம் எஸ் வரப்பிரகாசம் இம்மானுவேல் தாயார் பெயர் சவரியாச்சி

னாண்டோஅதிருப்தி தெரிவித்துள்ளார்.

சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழியில் கருமமாற்ற அரசியல் அமைப்புச் சட்டத்தில் மக்களுக்கு உரிமை வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கொழும்பு மாநகரசபை ஏற்ற முறையில் அரச கரும மொழிகளை அமுலாக்கியுள்ளதா என்ற ஒரு மதிப்பீட்டை மேற்கொள்ள அரச கரும மொழிகள் ஆணைக்குழு திட்டமிட்டுள்ளதாகவும் இத்திணைக்கள வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

## வடக்கு

அதிலும் திருக்கோணமலைத் தமிழர்களை விட யாழ்ப்பாணத் தமிழர்களே அதிகமாகக் காணப்படுகின்றனர் என்றும்,

அரச சார்பற்ற நிறுவனங்களும் குறிப்பிட்ட சமூகத்துக்குத்தான் உதவிகள் செய்கின்றன. எல்லாச் சமூகங்களைச் சேர்ந்த அகதிகளும் ஒரே மாதிரி நடத்தப்பட வேண்டும் என்றார்.

வடக்கு - கிழக்கு மாகாண அமைச்சு வெற்றிடங்களை நிரப்பும்போது இன விகிதாசாரத்திற்கு ஏற்ப நியமனம் செய்வதில்லை என்றும் அவர் பேசினார்.

இவரின் இவ்வுரையை ஆட்சேபித்து வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் லெப் ஜெனரல் நளின் செனவிரட்னவும் மாகாணசபைச் செயலாளர் எஸ். கணேசநாதனும் வெளிநடப்புச் செய்தனர்.

அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற இமமாநாட்டிற்கு புனரமைப்பு புனர்வாழ்வு மற்றும் சமூக சேவைகள் அமைச்சர் பி. தயாரெட்ணா தலைமை தாங்கினார்.

# உள்வந்த வெளிச்சென்ற வாகன இலக்கங்கள்

## 08-09-92

எமது பதிவில் உள்ள கடைசி இலக்கம் 5564

வடபகுதிக்கு உள்ளே அனுமதித்த வாகன இலக்கம்:

24-5529, 22-9005, 27-1072, 24-4747, 26-6309, 26-3126, 42-3726, 24-5912, 27-4289, 28-3306

வடபகுதிக்கு வெளியே அனுமதித்த வாகன இலக்கம்:

22-4632, 38-6028, 24-9038, 41-9457, 28-1049 26-5206, 26-1785 26-1728, 26-423, 42-1019, 26-2972, 26-8138 42-5556, 27-9327, 42-3815, 42-1464, 27-5823, 27-4023 26-1253, 22-4710